**<u>சார்பு நீதிமன்றம், செய்யாறு, திருவண்ணாமலை மாவட்டம்.</u>**

அ.வ. எண்.75/2023

| | | |
|---|---|---|
| வாதி தரப்பு சாட்சி | .. | 1 |
| பெயர் | .. | சரஸ்வதி |
| தகப்பனார் / கணவர் பெயர் | .. | |
| தொழில் | .. | |
| கிராமம் | .. | |
| தாலுக்கா | .. | |

2024 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 06ஆம் நாள் சனிக்கிழமை திரு. சி. குமாரவர்மன், எல்.எல்.எம்., சார்பு நீதிபதி, செய்யாறு அவர்களின் முன்னிலையில் உரிமையியல் நடைமுறைச்சட்டம் மற்றும் விதிகளின் படி உறுதி செய்யப்படுகிறது.

**<u>முதல் விசாரணை</u>**

நான் வழக்கில் வாதி. எனது சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விபரங்கள் என்னால் சொல்லப்பட்டது. நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்துக்கள் என்னுடையதுதான். எனது தரப்பில் கீழ்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்கிறேன். 18.03.1968 தேதிய கிரய ஆவணதின் சான்று நகல் வா.சா.ஆ.1, 26.03.2002 தேதிய கிரய ஆவணத்தின் சான்று நகல் வா.சா.ஆ.2, சண்முகம் இறப்பு சான்று வா.சா.ஆ.3, சண்முகம் வாரிசு சான்று வா.சா.ஆ.4, 28.05.2008 தேதிய விடுதலை ஆவணத்தின் சான்று நகல் வா.சா.ஆ.5, ராஜேஸ்வரி செங்கல்பட்டு அரசு கல்லூரி மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதற்கான நோட்டு புத்தகம் வா.சா.ஆ.6, 09.03.2017 தேதிய தானசெட்டிமெண்ட் ஆவணத்தின் சான்று நகல் வா.சா.ஆ.7, 17.03.2017 தேதிய தானசெட்டிமெண்ட் ஆவணத்தின் சான்று நகல் வா.சா.ஆ.8, 17.05.2017 தேதிய கிரய ஆவணத்தின் சான்று நகல் வா.சா.ஆ.9,

வந்தவாசி வடக்கு காவல் நிலைய குற்ற எண். 105/2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கை வா.சா.ஆ.10, ராஜேஸ்வரி இறப்பு சான்று வா.சா.ஆ.11, ராஜேஸ்வரி வாரிசு சான்று வா.சா.ஆ.12, கோவிந்தராஜ் பிள்ளை இறப்பு சான்று வா.சா.ஆ.13, கோவிந்தராஜ் பிள்ளை வாரிசு சான்று வா.சா.ஆ.14. (வா.சா.ஆ.3, 11 மற்றும் 13 ஆவணங்கள் அசலுடன் சரிபார்க்கப்பட்டு குறியீடு செய்யப்படுகிறது)